இருக்கிறது. இதனால் 1,108 ஏக்கர் பயன்பெறும், சுமார் 840 டன் அதிகமாக உணவு உற்பத்தி எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு மதிப்பிடப்பட்டுள்ள ரூ. 19.80 லட்சமாகும். அது அதிகாரியால் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

Air-ports

* 203 *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Government are aware of the location of an airport at Salem Town; and

(*b*) if so, whether the views of the State Government have been sought for by the Union Government?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) : இல்லை. சேலத்தில் ஒரு விமான நிலையம் அமைப்பதின் அவசியத்தை ஏற்கனவே இம்மாநில அரசு மைய அரசிற்கு வலியுறுத்தியுள்ளது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இதை எடுத்துக்கொள்ள வியலாது என்று மைய அரசு தெரிவித்துள்ளது. இது குறித்து சேலம் உருக்கு ஆலை வருவதனால் மைய அரசுடன் மீண்டும் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது.

திரு. எ. சி. நரசிம்மன் : தலைவரவர்களே, வேலூரிலுள்ள விமான நிலையத்தில் விமானம் தங்குவது இல்லை. கோயம்புத்தூருக்கும், பெங்களூருக்கும் செல்லும் விமானங்களை வேலூரில் தங்க ஏற்பாடு செய்ய மத்திய அரசுடன் தொடர்பு கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : வேலூர் கோட்டையை பற்றித்தான் எனக்குத் தெரியும். இப்போது மாண்புமிகு உறுப்பினர் சொல்வது உண்மையாக இருக்குமானால், அது பற்றி மத்திய அரசுக்கு எழுதலாம்.

* 204 வின—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் புதிய விமான நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

THIRU R. PONNAPPA NADAR : Sir, was there any proposal to open an 'air-strip' in Kanyakumari which is the fag end of India?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : Sir, I am not aware of such proposals.